**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**STC. No.36/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சின்ன கருப்பன் | த–பெ | சின்ன கருப்பன் |
| ஊர்: | : | அரிக்குடி | | |
| வயது: | : | 55/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.2026**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் அரியக்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2016ம் வருடம் எனது மகன் விஜய் என்பவரை ஆஜர் எதிரிகளில் ஒருவரான ரகு என்பவர் துபாய் நாட்டிற்கு வேலைக்கு அழைத்து சென்று அதற்கு ரூ.80000/– பணம் கொடுத்து எங்களை ஏமாற்றி விட்டார்கள். துபாயில் எனது மகனின் பாஸ்போர்ட்டை ரகு என்பவர் வாங்கி வைத்து கொண்டு பணத்தை தரமால் வேலையும் பெற்று தராமல் சம்பளமும் தராமலும் ஊருக்கு வர முடியாத சூழ்நிலையில் இருந்ததால் நாங்கள் காரைக்குடி தெற்கு காவல் நிலையம் சென்று 2017ம் வருடம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு சொன்னோம். மாவட்ட ஆட்சி தலைவர் மூலமாக மனு செய்து எனது மகனை ஊருக்கு வரவழைத்தோம். 4 வருடங்கள் கழித்து எனது மகன் இறந்து விட்டார். சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகாரை எழுதியது யார் என்றால் எனது மனைவி. எந்த தேதியில் புகார் கொடுத்தார்கள் என்று தேதி நியாபகம் இருக்கிறதா என்றால் இல்லை. எனது மகன் கொடுத்த தகவல் மூலமாக தான் புகார் செய்தோம், துபாயில் நடந்த விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளின் உண்மையான பெயர் ஒருவர் பெயர் சொர்னலிங்கம் என்றும் மற்றொருவர் பெயர் கருப்பு என்று சொன்னால் சரியா தவறா என்றால் தெரியாது. 1ம் எதிரி எனது வீட்டில் வந்து தான் பணம் பெற்று சென்றார் என்றால் சரிதான். 1ம் எதிரியின் வீடு எங்கு உள்ளது என்றால் மொட்டையன் வயல். மேற்படி ஊருக்கு காவல் நிலையம் ஆராவயல் என்றால் சரிதான். ஆராவயல் காவல் நிலையம் சென்று ஏன் புகார் அளிக்கவில்லை என்றால் தெரிந்தவர்கள் யாரும் இல்லை என்பதால் காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். எனக்கு யார் மூலம் எதிரிகள் அறிமுகம் ஆனார்கள் என்றால் எங்கள் ஊரில் உள்ள மெக்கானிக் பாண்டி என்பவர் மூலம் அறிமுகம். பணம் எந்த ரூபாயாக கொடுத்தேன் என்றால் ரூ.1000 ஆக கொடுத்தோம். எத்தனை 1000 ரூபாய் கொத்தோம் என்றால்

வெறும் 1000 ரூபாய் தாள்களாக 50000 ரூபாய்க்கு கொடுத்தோம். போலீஸ் விசாரணையில் அரசிடம் அனுமதி பெறாமல் விசா கொடுத்தார்கள் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அரசிடம் அனுமதி பெறாமல் விசா வாங்கினால் துபாய் நாட்டிற்கு செல்ல முடியாது என்றால் சரிதான். துபாயில் எதிரிகள் பாஸ்போர்ட் பறித்து வைத்துக் கொண்டதற்கு ஏதாவது துபாய் அரசிடம் புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி தெரியாது. மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்ததற்கு ஏதாவது ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது மகன் வெள்ளை பாஸ்போர்ட்டில் இந்தியா வந்ததற்கு ஏதாவது ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகன் துபாயில் 1 வருடம் இருந்து விட்டு தான் வந்தார் என்றால் சரிதான். எனது மகனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் எதிரிகள் கொடுத்த வேலையை செய்யாமல் தலைமறைவாகிவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் இந்தியா வந்தவுடன் உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எனது மகன் எப்போது இந்தியா எந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது மகன் துபாயில் இருந்து வந்த பின்பு காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் வாக்குமூலம் ஏதாவது கொடுத்தாரா என்றால் இல்லை. எனது மகன் என்ன படித்துள்ளார் என்றால் 9 ம் வகுப்பு படித்துள்ளார். அதற்கான ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எனது மகன் 6ம் வகுப்பு தான் படித்துள்ளார் அதனால் துபாயில் பெரியதாக வேலை எதுவும் வழங்க முடியவில்லை அதனால் எதிரிகள் கொடுத்த வேலையே பார்க்காமல் தப்பித்துவிட்டார் என்றால் சரியல்ல. துபாயில் இருந்த 1 வருடத்திற்கு தகுந்த வேலை கொடுத்து சம்பளமும் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு பணம் கொடுத்தற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்பதற்காக பொய்யான புகார் கொடுத்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.06 16:49:20 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**STC. No.36/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராக்கம்மாள் | க–பெ | நாகராஜன் |
| ஊர்: | : | அரியக்குடி | | |
| வயது: | : | 54/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டு வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.2026**
**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். விஜய் என்பவர் எனது தங்கை மகன். ஆஜர் எதிரிகளை தெரியாது. எனது தங்கை மகன் விஜய் என்பவர் 2016 ம் வருடம் துபாய்க்கு கூலி வேலைக்கு முகவர்கள் மூலம் சென்றார். 5 மாதங்கள் கழித்து அ.சா.1 க்கு விஜய் தொடர்பு கொண்டு தன்னுடைய கடவுச்சீட்டை முகவர்கள் பெற்றுக்கொண்டுவிட்டதாகவும், நான் வேலையில்லாமல் இருப்பதாகவும், சிரமத்தில் இருப்பதாகவும், ஊருக்கு வர விருப்பமாக இருப்பதாக சொல்லியுள்ளார். அ.சா.1 இது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளித்தார். பின்னர் போலீசார் எங்களிடம் வந்து விசாரணை செய்த போது நான் என்னுடைய ரூ.80000/– பணத்தை அ.சா.1 க்கு அவருடைய மகனுக்கு வேலை விசயமாக கொடுத்த விவரத்தை சொன்னேன். போலீசார் என்னை விசாரணை செய்து கையொப்பம் பெற்று கொண்டார்கள். மேற்படி விவரங்களை நான் விசாரணையில் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

எனது உடன் பிறந்த தங்கைக்கு நான் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். பணம் எந்த தேதியில் எப்படி கொடுத்தேன் என்றால் நியாபகம் இல்லை. மேற்படி பணத்தை எவ்வாறு யாரிடம் சென்று போயி கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. துபாயில் முகவர்கள் பாஸ்போர்ட்டை வாங்கி கொண்ட விவரம் மற்றும் அங்கு நடந்த விவரம் எனக்கு தெரியாது என்றால்வ சரிதான். புகாரில் என்ன விவரம் எழுதி கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தற்போது தான் தெரியும்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.06 16:49:26 +0530

KARMEGAKANNAN J
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.